CANADA
வாக்குகள்

2015 மத்திய அரசுத் தேர்தல் செய்திஅறிக்கை:
காலநிலை மாற்றம்

## பிரச்சினை

**எங்களுடைய தற்போதைய மற்றும் எதிர்கால நல்வாழ்வுக்கும் செழுமைக்கும், சுத்தமான வளி, சுத்தமான நீர், நிலையான காலநிலை, ஆரோக்கியமான உணவு வழங்கல்கள் மற்றும் சுத்தமான சக்தி ஆகியவை அடிப்படையாக இருக்கின்றன. அதே நேரத்தில், எங்களுடைய சூழலைப் பாதுகாப்பதற்கு மற்றும் உலகளாவிய வெப்பநிலையின் ஆபத்தான அதிகரிப்பை மறுதிசைக்குத் திருப்புவதற்கு, போதுமான எதையும் கனடா அரசாங்கம் செய்யவில்லை.**

## நிலைமை

தற்போது, வளிமண்டலத்திலுள்ள காபன், மில்லியனுக்கு 400 பாகங்களுக்கு மேலாக அதிகரித்துள்ளமை – பேரழிவுக்குரிய காலநிலை மாற்றத்துக்கான நிலைமைகளை உருவாக்குகின்றது. பசுமைக்குடில் (greenhouse) வாயுக்களை அதிகளவில் வெளித்தள்ளும் உலக நாடுகளில் ஒன்றாகத் தற்போது கனடா உள்ளது. (வருடமொன்றுக்கு தலா ஒருவருக்கு14.7 metric tons). 1990ல் இருந்து சக்தி நுகர்வு அண்ணளவாக 22 சதவீதத்தாலும், காபன் வெளியேற்றம் 19 சதவீதத்தாலும் அதிகரித்துள்ளது.

எச்சரிக்கை அறிகுறிகள் மிகத் தெளிவாகத் தெரிகின்றன. 2013ல் மட்டும், கல்கரியிலும் ரொறன்ரோவிலும் என்றுமில்லாத அளவில் வெள்ளப் பெருக்கையும், நாடு முழுவதிலுமுள்ள சமூக உள்ளகக் கட்டமைப்புக்களை நிலைகுலையச்செய்யும் பனிப் புயல்களையும் கனடா பார்த்துள்ளது. காலநிலை மாற்றத்துக்குக் காரணமான, பச்சைக்குடில் வாயுவை அதிகளவில் வெளியேற்றம் செய்யும் நாடுகள் எதுவும், அது பற்றி எந்தச் செயற்பாடுகளையும் செய்யாமலிருக்கும் தற்போதைய நிலை, போஷாக்கின்மை, நோய் மற்றும் நச்சாக்கத்தால் வருடாந்தம் ஐந்து மில்லியன் மக்களின் இறப்புக்குக்கு காரணமாவதுடன், தற்போது $1 trillionக்கும் மேற்பட்ட மிகப் பெரிய சொத்து இழப்புக்களையும் விளைவிக்கின்றது என மதிப்பிடப்பட்டுள்ளது.

காபன் நுகர்வைக் குறிப்பிடத்தக்களவு குறைக்கக்கூடிய, நம்பகமான காலநிலை மாற்ற நடவடிக்கைத் திட்டமொன்று கனடாவுக்குத் தேவை. 2009 Copenhagen காலநிலை மாற்ற மாநாட்டில் நிர்ணயிக்கப்பட்ட, 2005க்கு முன்பிருந்த எங்களுடைய பச்சைக்குடில் வாயுக்களின் (GHG) வெளியேற்ற அளவினை, 2020 அளவில், 17% ஆல் குறைக்கும் மிதமான (modest) இலக்கை அடைவதில் தற்போதைய முயற்சிகள் மிகக் குறைந்த விளைவை ஏற்படுத்தியுள்ளன அல்லது எந்த விளைவையும் ஏற்படுத்தவில்லை.

## பின்வருவனவற்றைச் செய்யும் திட்டமொன்று கனடாவுக்குத் தேவை

• உண்மையான செலவைப் பிரதிபலிக்கும், புதுமையை நாடவைக்கும் மற்றும் எங்களுடைய வளங்களை தொழிற்சாலைகளும் நுகர்வோர்களும் மிகவும் வினைத்திறனாகப் பாவிப்பதை உறுதிப்படுத்தும், உறுதியான மற்றும் எதிர்வுகூறக்கூடிய கட்டணமொன்றை காபன் நச்சாக்கலுக்கு விதித்தல்.

• எண்ணெய் மற்றும் பெற்றோலியப் (gas) பிரிவுகள் அனைத்துக்கும் பொருந்தும் கடுமையான GHG வெளியேற்றத் தரங்களை உருவாக்கல் மற்றும் வினைத்திறனற்ற தொல்படிவ எரிபொருள் (fossil fuel) மானியங்களையும் விசேடமான வரிச் சலுகைகளையும் (வருடாந்த மொத்தம் $1.4 பில்லியனுக்கும் அதிகமானவற்றை) அகற்றல்.

• காற்று, சூரியசக்தி, புவிவெப்பம், மற்றும் அலை ஆற்றல் போன்ற சுத்தமான, குறைந்தளவு தாக்கமுள்ள சக்தி மாற்றீடுகளுக்கும், விலங்குகளுக்கான வாழ்விடங்கள் உள்ளடங்கலாக கனடாவின் இயற்கைப் பகுதிகள் மற்றும் வளங்களைப் பாதுகாக்கவும் முதலீடுகளை வழங்கல்.

• காபன் வெளியேற்றக் குறைப்புக்கு, நாடுகளைப் பொறுப்பேற்கச் செய்யும் மற்றும் தொழிற்சாலைகள் இல்லாதபோதிருந்த அளவிலும் பார்க்க (குறைந்தது) 2° செல்சியஸ் அதிகரிப்புக்குக் குறைந்தளவில் உலகளாவிய சராசரி வெப்பநிலைகள் இருப்பதை உறுதிசெய்யும், நியாயமான, தெளிவான இலக்கைக் கொண்ட கட்டுப்படுத்தும் (binding) சர்வதேசரீதியான காலநிலை மாற்ற ஒப்பந்தம் ஒன்றை உருவாக்கல்.

• மிகவும் பாதிக்கப்படக்கூடிய, குறிப்பாக வடக்குக்கு அப்பாலும் தெற்கிலும் உள்ள, மிகவும் குறிப்பிடத்தக்க காலநிலை மாற்றங்களை எதிர்கொள்பவர்களின் இசைவாக்கல் முயற்சிகளுக்கு ஆதரவளித்தல். 2012ல் இருந்து, இந்த முயற்சிகளுக்கு கனடா எந்த நிதியுதவியும் வழங்கவில்லை.

## கேள்விகள்

1. நிலக்கரி, எண்ணெய் மற்றும் பெற்றோலிய மானியங்களை நிறுத்துவதற்காகவும் சுற்றுப்புறச் சட்டங்கள் மற்றும் ஒழுங்குமுறைளைப் வலுப்படுத்துவதற்காகவும் செயல்பட நீங்கள் விரும்புகின்றீர்களா

2. உலகளாவிய சராசரி வெப்பநிலை அதிகரிப்பை, 2° செல்சியஸ்க்குக் கீழ் வைத்திருப்பதற்காக காபன் வெளியேற்றத்துக்கு போதியளவு கட்டணமொன்றை அறவிடுவதை நீங்கள் ஆதரிக்கின்றீர்களா?

3. 2015, டிசம்பர் பாரிஸ், சர்வதேசரீதியான காலநிலை மாற்றத்துக்கான பேச்சுவார்த்தைகளில் (COP21) ஆக்கபூர்வமான பங்கொன்றைக் கனடா வகிப்பதை உறுதிப்படுத்துவதற்கு நீங்கள் என்ன செய்வீர்கள் / உங்களுடைய கட்சி என்ன செய்யும்?

4. வெளியேற்றல் குறைப்புகளுக்கான, அர்த்தமுள்ள இலக்குகளுடனான காலநிலை மாற்றத்துக்கான நடவடிக்கைத் திட்டமொன்றை உங்களுடைய கட்சி அறிமுகப்படுத்துமா?

## ஆதாரவளங்கள்:

**இந்தத் தொடர் பற்றிய மேலதிக தகவல்கள் மற்றும் கூடுதலான தரவுத்திரட்டுத் தாள்களுக்கு:** http://spno.ca/canada-votes-2015

இந்தத் தொடரைத் தயாரித்தவர்கள்: Canadian Council on Social Development, Community Development Council Durham, CommunityDevelopment Halton, Edmonton Social Planning Council, Saint John Human Development Council, Social Planning and Research Council ofBC,SocialPlanningandResearchCouncilofHamilton,SocialPlanningCouncil ofCambridgeandNorthDumfries,SocialPlanningCouncil of Kitchener-Waterloo, Social Planning Network of Ontario, & Social Planning Toronto.

மொழிபெயர்ப்பு : MCIS Language Services- இலாபகரமற்ற அமைப்பு

www.mcislanguages.ca

தேர்தல் நாள்: ஒக்ரோபர் 19, 2015